11th August 1965]

திரு. செ. மாதவன் : இந்த சானட்டோரியத்திற்கு கட்டடம் கட்டி பல மாதங்களாகியும் சர்க்கார் அதை எடுத்துக் கொள்ளாமல் இருந்ததே, அந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : It has since been opened.

ராணி மருத்துவ நிலையம், புதுக்கோட்டை

* 229 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை ராணி மருத்துவ நிலையத்தில் உரிய காலங்களில் கவனிக்கப்படாமையால் இறக்க நேரிட்டவர்கள் குறித்து அண்மையில் முறையீடுகள் ஏதேனும் வந்தனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, and

(*b*) The complaints were thoroughly enquired into and it has been found that there was no lapse on the part of the medical officers and the staff of the institution.

Tuticorin Deep Sea Harbour Project

* 230 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Tuticorin Deep Sea Harbour Project and the progress made in this regard so far?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : இந்தப் ப்ராஜெக்ட்டானது மத்திய அரசாங்க ப்ராஜெக்ட்டாக இருந்தாலும் இதற்கு இணைப்பாக ராஜ்ய சர்க்கார் எடுத்துச் செய்யும்படியான ரோடு வசதி, வாட்டர் சப்ளை வசதி போன்றவை எல்லாம் இந்த எஸ்டிமேட்டிலே சேர்ந்ததா ? அல்லது மாநில சர்க்கார் தனியாக செலவழித்துக் கொண்டு வருகிறார்களா ? அல்லது இதிலேயே அடங்கியிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்களால் மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த துறைமுக அபிவிருத்திக்காகவும், தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் நில ஆர்ஜிதம் செய்வது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 4,478 எக்கர்கள் துறைமுகத்திற்காகவும், தொழில்கள் அமைப்பதற்கும், தொழி

a Printed as Appendix V on pages 778-784.